வியட்நாம் நாட்டில் ஏற்பட்ட படகு விபத்தில்

# 10 தமிழர்கள் உள்ளிட்ட 15 இந்தியர்கள் உயிரிழப்பு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 13 -

ஆசியாவில் தென்சீன கடல் பகுதியில் அமைந்துள்ள நாடு வியட்நாம். இந்நாட்டில் பல்வேறு தீவுகள், சுற்றுலா தலங்கள் உள்ளன. இந்த சுற்றுலா தலங்களுக்கு இந்தியா உள்பட உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

### இந்தியர்கள்

இந்நிலையில், இந்தியாவை சேர்ந்த 32 சுற்றுலா பயணிகள் உள்பட 36 பேர் நேற்று (11.07.2026) காலை பு குவாக் தீவுக்கு படகில் சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

### படகு விபத்து

மோசமான வானிலை காரணமாக படகு கடலில் கவிழ்ந்து விபத்துக் குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணம் செய்த அனைவரும் கடலில் விழுந்து தத்தளித்துள்ளனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழு வினர் 18 பேரை மீட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் இந்தியாவை சேர்ந்த சுற்றுலா பயணிகள் 15 பேர் உயிரிழந்தனர்.

### 10 தமிழர்கள்

இந்நிலையில், இந்த படகு விபத்தில் உயிரிழந்தவர்களில் 10 பேர் தமிழ்நாட்டை (திண்டுக்கல், சேலம், திருச்சி, தருமபுரி) சேர்ந்தவர்கள் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

செந்தில் குமார், முருக பிரபு, ஸ்ரீதர், ஷேக் அப்துல்லா, பாலாஜி, வினய குமார், ரவி சங்கர், பாபு, சந்தோஷ் குமார் மற்றும் அழகு ராஜன் உள்ளிட்ட 10 தமிழர்கள் பலியாகி உள்ளனர்.

படகு விபத்தில் லாவா மொபைல் நிறுவன ஊழியர்கள் சிலரும் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிறந்த வணிக செயல்பாட்டிற்காக செல்போன் கடை உரிமையாளர்கள், நிறுவன ஊழியர்கள் உள்பட சிலரை லாவா மொபைல் நிறுவனம் வியட்நாமிற்கு சுற்றுலா அழைத்து சென்றுள்ளது. அவர்களும் இந்த படகு விபத்தில் சிக்கியுள்ளனர்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

வியட்நாம் நாட்டில் நிகழ்ந்த படகு விபத்தில் 10 தமிழர்கள் உள்ளிட்ட 15 இந்தியர்கள் உயிரிழந்த துயர்மிகு செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

உயிரிழந்தோரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# வாட்ஸ்அப்பில் பயணிகள் பெறப்பட்ட 'ஸ்கிரீன்ஷாட்' டிக்கெட் காட்டுவது ஏற்கப்படாது!

## ரயில் பயணிகள் கடும் அதிருப்தி!

புதுடெல்லி, ஜூலை.13-

செல்போனில் வாட்ஸ்அப் மூலம் பெறப்படும் ரயில் டிக்கெட் நகல்கள் மற்றும் ஸ்கிரீன்ஷாட்டுகள் பயணத்திற்கு செல்லாது என்று ரயில்வே நிர்வாகம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. தென் கிழக்கு மத்திய ரயில்வே தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'பயணிகள் வாட்ஸ்அப்பில் பெறப்பட்ட டிக்கெட்டைக் காட்டுவது ஏற்கப்படாது; ரயில்வே விதிகளைத் தெரிந்திருப்பது அவசியம்! 'ரெயில்ஒன்' செயலி மூலம் பதிவு செய்யப்படும் முன்பதிவில்லா டிக்கெட்டுகள், எந்த செல்போனில் இருந்து பதிவு செய்யப்பட்டதோ அந்த பதிவு செய்யப்பட்ட அசல் செல்போனில் மட்டுமே செல்லுபடியாகும்; அதனுடன் பயணத்தின் போது அசல் செல்போனுடன் புகைப்பட அடையாள அட்டையும் வைத்திருப்பது கட்டாயம்; மாறாக வாட்ஸ்அப் நகல், ஸ்கிரீன்ஷாட்' அல்லது பிற வழிகளில் பெறப்படும் டிக்கெட்டுகள் செல்லாது' என்று தெரிவித்துள்ளது.

ரயில்வேயின் இந்த புதிய அறிவிப்புக்கு பயணிகள் தரப்பில் இருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இதுகுறித்து பயணி ஒருவர் சமூக வலைதளத்தில், 'நான் எனது குடும்பத்தினருக்காக ஆன்லைனில் டிக்கெட்டுகளை பதிவு செய்கிறேன், அதற்குரிய அடையாள அட்டையும் எங்களிடம் உள்ளது. இதற்கு மேல் என்ன வேண்டும்? இது ஒரு பகல் கொள்ளை' என்று சாடியுள்ளார்.

மேலும் மற்றொரு பயணி, ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்வை குறிப்பிட்டு, 'வயதானவர்கள் மற்றும் பலருக்கு இது போன்ற செயலிகளை பயன்படுத்த தெரியாது, நான் எனது குடும்பத்தினருக்கு டிக்கெட் எடுத்து விட்டு அவர்களுடன் பயணிக்காத பட்சத்தில், எனது செல்போனையும் அவர்களிடம் கொடுத்து அனுப்ப வேண்டுமா, எல்லாரும் பயன்படுத்தும் வகையில் விதிகளை எளிய முறையில் உருவாக்குங்கள்' என்று தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர்களை குறிவைத்து

# அரசுதான் முட்டை வீசி தாக்கச் சொன்னது!

## பா.ஜ.க. நிர்வாகியின் அதிர்ச்சி கருத்தால் பரபரப்பு!

கொல்கத்தா, ஜூலை 13-

மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகி மீது பா.ஜ.க. பஞ்சாயத்து பொறுப்பாளர் ஒருவர் முட்டைகளைத் தேய்த்து அராஜகத்தில் ஈடுபட்ட வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

மேற்குவங்க மாநிலம் கிழக்கு மிதினாப்பூர் மாவட்டம் திகா பகுதியில், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த முன்னாள் பஞ்சாயத்து உறுப்பினரான மானஸ் தாஸ் என்பவரை வழிமறித்த பா.ஜ.க. பஞ்சாயத்து எதிர்க்கட்சித்தலைவர் சுப்ரதா ஜனா, அவரது முகத்தில் முட்டைகளை வீசி அராஜகத்தில் ஈடுபட்டதோடு, இது 'அரசு உத்தரவு' என்று கூறிய வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியபோது, தான் அரசு உத்தரவின்படியே செயல்படுவதாகக் கூறிய சுப்ரதா ஜனா, பின்னர் தனது விளக்கத்தில், 'வங்க மொழியில் சர்க்கார் என்றால் மந்திரவாதி பி.சி. சர்க்காரைக் கூட குறிக்கலாம்; நான் மானஸ் தாஸ் மீது முட்டைகளை வீசவில்லை, அவரது முகத்தில் முட்டையை தேய்த்தேன்; முதியவரான அவரது சுருங்கிய தோலுக்கு முட்டையில் உள்ள வைட்டமின்கள் தேவைப்படுவதால் அப்படிச் செய்தேன்; அவர் என் மீது சுமத்திய பாலியல் பலாத்காரம் உள்ளிட்ட பொய் வழக்குகளுக்காகவும், அவரது ஊழலுக்காகவுமே இவ்வாறு நடந்துகொண்டேன்' என்று தெரிவித்துள்ளார்.

திரிணாமுல் காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளைக் குறிவைத்து கடந்த மே மாதத்தில் இருந்து அரங்கேறி வரும் இத்தகைய முட்டை வீச்சு சம்பவங்கள் மனிதத்தன்மையற்றது என்று கொல்கத்தா உயர் நீதிமன்றம் ஏற்கனவே கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், இச்சம்பவம் குறித்து திரிணாமுல் காங்கிரஸ் தரப்பில், 'பா.ஜ.க.வினர் தங்கள் அராஜகத்தை நியாயப் படுத்த வீண் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்கள்; புகார்கள் இருந்தால் அவர்கள் ஏன் போலீசாரிடம் செல்லவில்லை?' என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த இரண்டு ஆண்டில் மட்டும்

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் 50,000 ஐ.டி. ஊழியர்கள் வேலையிழப்பு!

## மேலும் வேலைவாய்ப்புகள் பறிபோகும் அபாயம்!

பெங்களூரு, ஜூலை 13 -

தகவல் தொழில்நுட்ப துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வருகையால் மனிதவள மேலாண்மையில் பெரும் மாற்றம் ஏற்பட்டு வேலைவாய்ப்புகள் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப துறையானது செயற்கை நுண்ணறிவு எனப்படும் 'ஏஐ' தொழில்நுட்பத்தின் அலைகளால் பெரும் மாற்றத்தை சந்தித்து வருகிறது. இதனால் ஐடி நிறுவனங்கள் தங்களின் மனிதவளத்தை நிர்வகிக்கும் முறையில் வியூகம் சார்ந்த மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்த தொழில்நுட்ப மாற்றத்தின் காரணமாக 2025ம் ஆண்டு மற்றும் 2026ம் ஆண்டுகளில் ஐடி துறையில் வேலை இழப்புகள் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பிரபல மனிதவள நிறுவனமான டீம்லீஸ் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, கடந்த மே மாதம் வரை 10,000 முதல் 15,000 ஊழியர்கள் தங்களின் வேலைகளை இழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை நடப்பு முழு ஆண்டின் இறுதியில் 25,000 முதல் 35,000 ஆக உயரும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், சிஐஇஎல் எச்ஆர் சர்வீசஸ் என்ற நிறுவனம் வெளியிட்ட புள்ளிவிவரத்தின் படி, மே மாதம் வரை சுமார் 12,000 ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். முழு ஆண்டின் கணிப்பின்படி இந்த எண்ணிக்கை 18,000 முதல் 21,000 ஆக அதிகரிக்கும் என்றும், 2025ம் மற்றும் 2026ம் ஆண்டுகளின் ஒருங்கிணைந்த தாக்கத்தால் இந்த வேலை இழப்பு 43,000 முதல் 50,000 வரை உயரக்கூடும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வேலை இழப்புகளுக்கு பின்னால் நிறுவனங்கள் பல்வேறு ரகசிய உத்திகளை கையாண்டு வருகின்றன. ஊழியர்களை நேரடியாக பணிநீக்கம் செய்யாமல், கடுமையான செயல்திறன் மதிப்பீட்டு முறைகளை கையாண்டு அவர்களை தாங்களாகவே வெளியேறச் செய்யும் மறைமுக பணிநீக்க முறைகளை நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. புதிய பணியாளர்களை தேர்வு செய்யாமல் பணியிடங்களை முடக்குவது, ஊழியர்களை திட்டப்பணிகள் ஒதுக்காமல் காத்திருப்போர் பட்டியலில் வைப்பது மற்றும் வீட்டிலிருந்து பணிபுரியும் ஊழியர்களை கட்டாயமாக அலுவலகத்திற்கு வரவழைத்து அவர்கள் தானாகவே ராஜினாமா செய்ய வைப்பது போன்ற வழிமுறைகளை நிறுவனங்கள் செயல்படுத்துகின்றன.

அதே நேரத்தில், தரக் கட்டுப்பாட்டு சோதனைகளை தானியங்கி முறையில் செய்தல், வாடிக்கையாளர் சேவை மையங்களில் ஏஐ ரோபோக்களை பயன்படுத்துதல் மற்றும் திட்ட ஆவணங்களை உடனடியாக சுருக்கித் தரும் ஏஐ கருவிகளை கையாளுதல் போன்ற வழக்கமான பணிகளை ஏஐ தொழில்நுட்பம் மூலமாக நிறுவனங்கள் எளிதாக்கியுள்ளன. அதே நேரத்தில், ஏஐ தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகி வருகின்றன. குறிப்பாக, ஏஐ பிராம்ப்ட் இன்ஜினியர்கள், மெஷின் லேர்னிங் ஆப்ஸ் எனப்படும் எம்எல்ஆப்ஸ் வல்லுநர்கள், ஏஐ மாதிரிகளுக்கான தரவுகளை சுத்திகரிக்கும் நிபுணர்கள் மற்றும் ஏஐ தரவு பாதுகாப்பு மற்றும் நெறிமுறைகளை கண்காணிக்கும் அதிகாரிகள் போன்ற புதிய உயர் பதவிகளுக்கான தேவைகள் சந்தையில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

காவிரி நதி நீர் விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை மீட்டெடுக்காமல்

# வரலாறு தெரியாமல் த.வெ.க. அமைச்சர் பேசுகிறார்!

## கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் கண்டன அறிக்கை!



கிருஷ்ணகிரி, ஜூலை 13 -

காவிரி நதிநீர் விவகாரத்தில் தமிழகத்தின் வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுக்க முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் தற்போதைய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் நடத்திய நீண்ட நெடிய அரசியல் சட்டப் போராட்டங்களின் வரலாறு தெரியாமல், அதிகார போதையில் த.வெ.க சட்ட அமைச்சர் நிர்மல் குமார் அவதூறு பரப்புவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.செங்குட்டுவன் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

### அருகதையுள்ளதா?

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள விரிவான அறிக்கையில், "காவிரி நதியின் வரலாறு எதுவுமே தெரியாமல் தான்தோன்றித்தனமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காவிரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு துரோகம் செய்து விட்டார் என்று குற்றம்சாட்டும் சட்ட அமைச்சர் நிர்மல் குமார் அவர்களே, குற்றச் சாட்டை வைப்பதற்கு முன்பு ஒரு முறை உங்களை நீங்களே கண்ணாடியில் பார்த்து விட்டு குற்றம் சொல்வது சரியாக இருக்கும். முத்தமிழறிஞர் கலைஞர் மீது குற்றம் சுமத்துவதற்கு துளி அளவேனும் உங்களுக்கு அருகதை உள்ளதா என்று யோசிக்க வேண்டும்" எனச் சாடியுள்ளார்.

மேலும், 200 ஆண்டு கால காவிரி நதி போராட்ட வரலாற்றை விளக்கியுள்ள அவர், கடந்த 1807ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்த சென்னை ராஜதானிக்கும் மன்னராட்சியின் கீழ் இருந்த மைசூர் அரசிற்கும் இடையே காவிரி நதி பிரச்சினை குறித்த கடிதங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அப்போது மைசூர் அரசின் திவான் பூர்ணையா தமிழ்நாட்டின் கடிதங்களைப் பொருட்படுத்தாத நிலையில், 1831ல் மைசூர் அரசை ஆங்கிலேயர்கள் தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்ட போதிலும் அமைதி காத்தனர். பின்னர், 1856ல் கர்நாடகத்தில் பொது பணித்துறை என்ற அமைப்பை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளை மெல்ல நகர்த்தினர்.

### 1892இல் இரு மாநிலங்களுக் கிடையே முதல் ஒப்பந்தம்!

அதன் தொடர்ச்சியாக, 1872ம் ஆண்டு இரு மாநில அதிகாரிகளும் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து பேசித் தீர்க்க முடிவெடுத்தனர். 1890ம் ஆண்டு சென்னை மாகாணம் சார்பில் ஹெச். இ.ஸ்டோக்ஸ், நீர்ப்பாசனத் துறை பொறியாளர் ஜி.டி.வால்ஸ் மற்றும் மைசூர் சமஸ்தானம் சார்பில் ஆலிவர் செயின்ட் ஜான், கே.ஷேஷாத்திரி ஐய்யர், கர்னல் சி.போவன் ஆகியோர் கூடி உதகமண்டலத்தில் முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் அடிப்படையில் 1892ல் இரு மாநிலங்களுக்கும் இடையே முதல் ஒப்பந்தம் ஏற்பட்டு, தமிழ்நாட்டின் 13.45 லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு 366.9 டி.எம்.சி தண்ணீரும், மைசூரின் 1.11 லட்சம் ஏக்கருக்கு 27.2 டி.எம்.சி தண்ணீரும் எடுத்துக்கொள்வதென உடன்பாடு எட்டப்பட்டது.

தொடர்ந்து, 1900ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு கடலில் வீணாகக் கலக்கும் தண்ணீரைச்சேமிக்க, 1910ல் காவிரியின் குறுக்கே தமிழகத்தில் மேட்டூர் அணையும், மைசூரில் கண்ணம்பாடி அணையும் கட்ட முடிவு செய்யப்பட்டு மத்திய ஆங்கிலேய ஆட்சியாளர்களின் கவனத்திற்கு அனுப்பப்பட்டது. இதன் விளைவாக 1924ல் புதிய ஒப்பந்தம் 50 ஆண்டு காலத்திற்குப் போடப்பட்டு, மீண்டும் 1974ல் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற வகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இருப்பினும், 1934 முதல் 1972 வரை சுமார் 36 ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்குரிய தண்ணீர்ப் பங்கை கர்நாடகா வழங்கவே இல்லை என்றும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது காவிரி ஒப்பந்தங்களை மீறி கர்நாடக அரசு தமிழகத்திற்குத் துரோகமே இழைத்து வந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காவிரி ஆறு குடகு தலைகாவிரியிலிருந்து வங்கக்கடல் வரை 800 கிலோ மீட்டர் பயணிக்கிறது. இதில் கர்நாடகத்தில் 320 கி.மீ, தமிழ்நாட்டில் 416 கி.மீ, எல்லைப் பகுதியில் 64 கி.மீ பாயும் இந்த நதிநீர், தமிழகத்தில் 19 மாவட்ட மக்களுக்கு குடிநீராகவும், 10 மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் விளங்கி வருகிறது. இந்த உரிமையை மீட்க கலைஞர் மற்றும் மு.க.ஸ்டாலின் ஆகியோர் நடத்திய போராட்டங்களை அவர் பட்டியலிட்டுள்ளார்.

### 1969 இல் காவிரி நடுவர் மன்றம் அமைக்க கோரிக்கை!

கடந்த 1967ல் பேரறிஞர் அண்ணா அமைச்சரவையில் கலைஞர் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோதே இதற்கான பணிகள் தொடங்கின. 1969லேயே திமுக சார்பில் காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டதுடன், சட்டமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியவர் கலைஞர் ஆவார். சலிக்காமல் 35க்கும் மேற்பட்ட முறை கர்நாடகத்தோடு பேசியவர். 1990 ஏப்ரல் 24 அன்று தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, அன்றைய பிரதமர் வி.பி.சிங்கிடம் வாதாடி "காவிரி நடுவர் மன்றம்" அமைத்துத் தந்தவரும் கலைஞர்தான். நடுவர் மன்றத்திற்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்க அதிகாரமில்லை என நடுவர் மன்றம் மறுத்தபோது, உச்ச நீதிமன்றம் சென்று இடைக்கால உத்தரவு வழங்கச் செய்து, அதன் மூலம் தமிழகத்திற்கு 205 டி.எம்.சி தண்ணீர் கிடைக்கப் பெற்றுத் தந்தார். தொடர்ந்து 2006ல் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் நடுவர் மன்ற விசாரணையை வேகப்படுத்தி, 2007 பிப்ரவரி 5 அன்று 192 டி.எம்.சி தண்ணீர் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்து அதனை மத்திய அரசின் அரசிதழிலும் வெளியிடச் செய்தார் என்று தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.அரசின்துரோகங்களைச் சாடியுள்ள டி.செங்குட்டுவன், கடந்த 1992ல் காவிரி விவகாரம் தொடர்பாக மத்திய அரசு எழுதிய கடிதத்திற்கு 14.04.1993 வரை பதிலளிக்காமல் அன்றைய அ.தி.மு.க. அரசு குரட்டை விட்டுத் தூங்கியதாகக் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், நடுவர் மன்றத் தீர்ப்பை "பல்லில்லாத ஆணை" என ஏளனம் செய்து நதிநீர் ஆணையக் கூட்டங்களை அ.தி.மு.க. அரசு புறக்கணித்ததாகவும், தமிழகக் காவிரிப் படுகையில் 10 டி.எம்.சி நிலத்தடி நீர் இருப்பதாக நீதி மன்றத்தில் அதிமுக அரசு தவறான புள்ளி விவரத்தைச் சமர்ப்பித்த காரணத்தால்தான், உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பில் தமிழகத்தின் பங்கு 177.25 டி.எம்.சி ஆகக் குறைந்து போக அதிமுக அரசே முக்கியக் காரணம் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

### உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு!

அதேபோல், தற்போதைய திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் களப் போராட்டங்களைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு வந்தவுடன் காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய மோடி அரசு மறுத்தபோது, மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியிலிருந்து கடலூர் வரை 19 மாவட்ட விவசாயிகளைத் திரட்டி பிரம்மாண்ட உரிமை மீட்பு நடைபயணம் மேற்கொண்டார் என்று கூறியுள்ளார்.

மேலும், பிரதமர் மோடி சென்னை வந்தபோது ஒட்டுமொத்த தமிழக மக்களின் எதிர்ப்பைக் காட்டும் விதமாக கறுப்புக் கொடி ஏந்தி "Go Back Modi" போராட்டம் நடத்தி, ஒன்றிய அரசைப் பணிய வைத்துகாவிரிமேலாண்மை வாரியம் அமையக் காரணமாக மு.க.ஸ்டாலின் இருந்தார் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, திருவாரூர் மண்ணில் பிறந்த கலைஞர் காவிரிக்காக எந்த அளவிற்குப் பாடுபட்டார், சட்டப் போராட்டங்களை நடத்தினார் என்பதை இந்த வரலாற்றுத் தரவுகள் மூலமாக அறியலாம். இப்படிப்பட்ட காவிரி வரலாறுகள் எதுவுமே தெரியாமல், எடுத்தேன் கவிழ்ந்தேன் பாணியில் கலைஞர் மீது துரோகக் குற்றச்சாட்டு சுமத்துவதை த.வெ.க அமைச்சர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். காவிரி வரலாறு அறவே தெரியாமல் முத்தமிழறிஞர் கலைஞர் மீது குற்றம் சுமத்தி அறிக்கை விட்ட தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் அவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.செங்குட்டுவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் பூங்கா சாலையில்

# அங்கன்வாடி ஊழியர்கள் கருப்பு பேட்ச் அணிந்து நூதன போராட்டம்!




நாமக்கல், ஜூலை 13 -

நாமக்கல் பூங்கா சாலையில் தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் சார்பில், மாவட்டத் தலைவர் காந்திமதி தலைமையில் மாபெரும் தர்ணா போராட்டம் நடைபெற்றது.

அங்கன்வாடி திட்டத்தைத் தனியார்மயமாக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும், ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் மற்றும் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் இப்போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. மேலும், ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு அகவிலைப்படியுடன் கூடிய ஓய்வூதியம் மற்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி முறையே ரூ.10 லட்சம், ரூ.5 லட்சம் பணிக்கொடை வழங்க வேண்டும் எனவும் சங்க நிர்வாகிகள் கோரிக்கை விடுத்தனர்.

இப்போராட்டத்தில் பங்கேற்ற 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள், தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி கருப்பு பேட்ச் அணிந்தும், செல்போன் டார்ச் லைட்டுகளை ஒளிர விட்டும் நூதன முறையில் முழக்கங்களை எழுப்பி எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், சூரங்குடி கிராமத்தில் பெத்தனாட்ச்சியம்மன் ஸ்ரீ முனியசாமி கோவில் ஆனி மாத கொடை விழாவை முன்னிட்டு,மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், மாவட்ட பிரதிநிதி செந்தூர்பாண்டி, ஒன்றிய துணைச் செயலாளர் சுப்பிரமணியன், கிளை செயலாளர்கள் சந்திரசேகர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.